Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 131/2024** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **மல்லையன்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2025

---

**1 முதல் 5, 7 எதிரிகள் ஆஜர். 6 வது எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் வழக்கறிஞர் ஆஜர்.**

**03.11.2025**

**முதல் விசாரணை:**

1. நான் மறவர்பெருங்குடியில் குடியிருந்து வருகிறேன். சர்க்கரை, சக்தி, முருகன் ஆகியோர்களை தெரியும். மீதமுள்ள நபர்களின் பெயர் தெரியாது. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு 14 ம் தேதி 11 வது மாதம் க.விலக்கு அருகே உள்ள மதுபான கடையில் நானும், அசா.1 கார்த்தி மற்றும் கருப்பசாமி ஆகிய மூன்று பேரும் வாங்கி மறவர்பெருங்குடிக்கும் க.விலக்கிற்கும் நடுவில் உள்ள பட்டாளம்மன்கோவில் அருகில் உள்ள பாலத்தில் உட்கார்ந்து மது அருந்தி கொண்டிருந்தோம் . அன்று இரவு 07.30 மணியளவில் ஆஜர் எதிரிகள் மற்றும் 10 பேர் அடங்கிய கும்பல் டாடா சுமோ காரில் அங்கு வந்தார்கள். செல்போனில் உள்ள டார்ச்லைட்டை அடித்து பார்த்தார்கள், யார் டார்ச் அடித்தார்கள் என்று இருட்டாக இருந்ததால் என்னால் பார்க்க இயலவில்லை.

2. அப்போது எங்களுடன் அசா.1 கார்த்தியை மட்டும் வந்த கும்பல் 10 பேர் சேர்ந்து தூக்கி கொண்டு காட்டிற்குள் சென்றுவிட்டார்கள். ரோட்டிற்கு தெற்கு புறம் உள்ள காட்டிற்கு தூக்கி சென்றார்கள். நான் எழுந்தபோது

என்னை தள்ளிவிட்டார்கள், யார் தள்ளிவிட்டார்கள் என்று இருட்டில் என்னால் பார்க்க முடியவில்லை. 10 நிமிடங்கள் கழித்து நானும் டார்ச் லைட் அடித்து கொண்டு பின்னாலேயே போனேன். கார்த்தியை தூக்கி கொண்டு வைத்த இடம் எவ்வளவு தூரம் என்று சரியாக சொல்ல இயலவில்லை. நான் செல்வதற்குள் அடித்து முடித்துவிட்டார்கள். அந்த இடத்திற்கு நான் மட்டும் தான் சென்றேன். நான் செல்லும்போது சம்பவ இடத்தில் கடைசியாக நான்கு நபர்கள் மட்டும் தான் இருந்தார்கள். அதில் சர்க்கரை மற்றும் சக்தி இருந்தார்கள், மேலும் ஆஜர் எதிரிகளில் ஒருவர் இருந்தார் (சாட்சி மற்றொரு நபரை நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார் அவர் 5 வது எதிரி இளையராஜா) மற்றொரு நபரின் பெயர் தெரியவில்லை, அவர் ஆஜர் எதிரிகளில் உள்ளவர்கள் இல்லை.

**( இன்று 6 வது எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகாத காரணத்தினால் எதிரிகளை அடையாளம் காண முதல் விசாரணை தொடர்ச்சியானது ஒத்தி வைக்கப்படுகிறது)**